**செய்தி வெளியீடு எண்: 1 5 7** **நாள் : 15.04.2015**

**<u>பத்திரிக்கைச் செய்தி</u>**

சமூக நலம் மற்றும் சத்தணவுத் திட்டத்துறையின் கீழ் புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை உள்ள மொத்தம் 54.63 இலட்சம் குழந்தைகளுக்கு 42619 சத்துணவு மையங்கள் மூலமாக சுவையான கலவை சாதம் அளிக்கப்பட்டு வருகிறது. இதற்கென 1,28,000 பணியாளர்கள் சிறப்பு காலமுறை ஊதியம் அடிப்படையில் பணியாற்றி வருகிறார்கள். இந்த அரசு இவர்களுக்கென பல சலுகைகளை நிறைவாக அளித்து வருகின்றது. இத்திட்டத்திற்காக 2014–2015 ஆம் ஆண்டில் ரூபாய் 1412.88 கோடி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு சத்துணவு ஊழியர் சங்கத்தினால் இன்று (15.04.2015) முதல் காலவரையற்ற போராட்டத்தை துவக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டது. இந்த சங்கம் உட்பட மேலும் 11 சத்துணவு ஊழியர் சங்கங்களால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் 12 கோரிக்கைகள் அரசால் பரிசீலிக்கப்பட்டு தகுந்த ஆணைகள் வெளியிடுவதாக உறுதியளிக்கப்பட்டதை ஏற்று போராட்டத்தை கைவிட்டு அறிக்கை அளித்தனர். அதன் பின்னரும் தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தை சேர்ந்த திரு. பழனிச்சாமி என்பவர் தலைமையிலான பணியாளர்கள் போராட்டத்தை துவக்கினர். அரசு இது குறித்து மாவட்ட ஆட்சியர்கள் மூலமும் இதர அரசு அலுவலர்கள் மூலமும் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுத்து, மாவட்டங்களில் உள்ள அனைத்து சத்துணவு மையங்களும் இன்று திறக்கப்பட்டு, சத்துணவு சமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. 10 ஆம் வகுப்பு தேர்வுகள் முடிக்கப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள மற்ற வகுப்பு குழந்தைகளுக்கும் ருசியான கலவை சாதம் வழங்கும் பணி தொடருவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. குழந்தைகளின் நலனுக்கு எதிராக செயல்பட்ட தமிழ்நாடு சத்துணவு ஊழியர்கள் சங்கத்தினரால் துவக்கப்பட்ட போராட்டம் தேவையற்றது. அரசால் எடுக்கப்பட்ட அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையினால் திட்ட செயல்பாட்டில் எவ்வித சுணக்கமும் இன்றி குழந்தைகளுக்கு மதிய உணவு வழங்கும் பணி சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**